| தரம் 05 | மூன்றாம் தவணைப் பரீட்சை – 2022/2023 |
|---|---|
| | சுற்றாடல் சார் செயற்பாடுகள் |

சுட்டெண்: | | | | | |

நேரம் : 1.30 மணித்தியாலம்

1. **சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

01. உள்ளத்தை இதப்படுத்தும் செயற்பாட்டின் படிமுறைகளில் நான்காவது படிமுறை
(1) மனவுறுதி (2) பிரார்த்தனை (3) மலர்வு

02. சமாதானத்திற்கான நோபல் பரிசினைப் பெற்று இலங்கைக்குப் பெருமை சேர்த்தவர்.
(1) ஜோ. அபேவிக்ரம (2) மொஹான் முனசிங்க (3) ரவி. பி. சில்வா

03. எமது நாட்டுக்கே உரித்தான விலங்கு
(1) யானை (2) மான் (3) சருகுமான்

04. பொத்திகளை உருவாக்கும் தாவரம்
(1) சோளம் (2) வாழை (3) பப்பாசி

05. நத்தைகள் எலிகளைப் பிடித்து உண்ணும் பறவைகள் முறையே
(1) செண்பகம், ஆந்தை (2) பருந்து, பாம்பு (3) வாத்து, ஆந்தை

06. மிளகாய் அரைப்பதற்கு முற்காலத்தில் பயன்படுத்தப்பட்ட கருவி
(1) துருவலை (2) அம்மி (3) ஆட்டுக்கல்

07. காபோவைதரேற்று, புரதம், கொழுப்பு ஆகியன அடங்கியுள்ள உணவுகள் முறையே
(1) ஈரப்பலா, மீன், மாஜரின்
(2) நிலக்கடலை, கோதுமை, மீன்
(3) கருவாடு, மீன், இறைச்சி

08. இலங்கையில் அதிகளவு மண்சரிவு ஏற்படும் பிரதேசங்களில் ஒன்று
(1) அநுராதபுரம் (2) பொலநறுவை (3) இரத்தினபுரி

09. சட்டவிரோத செயல் காரணமாக ஒருவருக்கு ஏற்படும் பாதிப்புகளில் ஒன்று
(1) சுய கௌரவம் பாதிக்கப்படல்
(2) சமூக அங்கீகாரம் கிடைத்தல்
(3) எதிர்காலம் சிறப்பாக அமையும்

10. உப்பு இடப்பட்ட பாத்திரம் ஒன்றில் முட்டையினை இடும்போது யாது நிகழக்கூடும்?
(1) கெட்ட முட்டை அமிழும்
(2) நல்ல முட்டை அமிழும்
(3) நல்ல முட்டை மிதக்கும்

11. திருமணச் சடங்குகளின்போது நீர் நிரம்பிய குடம் ஒன்றினை முன்னே வைப்போர்
(1) கிறிஸ்தவர்கள் (2) தமிழர்கள் (3) சிங்களவர்கள்

12. வித்துக்களை நீரில் ஊறவைத்துப் பாத்திகளில் நடுவதன் பிரதான நோக்கம்.
    (1) விளைச்சலை அதிகரிக்க
    (2) முளைத்தலை விரைவுபடுத்த
    (3) நடுகை இலகுவாக்க
13. தேசப்படங்களில் அதிவேக பாதை, சிறு வீதிகள், பெருந்தெருக்கள் ஆகியன முறையே குறிப்பிடப்பட்டிருக்கும் நிறங்கள்.
    (1) ஊதா, மஞ்சள், சிவப்பு
    (2) சிவப்பு, ஊதா, கறுப்பு
    (3) மஞ்சள், ஊதா, சிவப்பு
14. சந்திர கிரகணம் ஏற்படுவது
    (1) இரவில் அமாவாசை தினத்தில்
    (2) இரவில் பூரணை தினத்தில்
    (3) பகலில் பௌர்ணமி தினத்தில்
15. அச்சு வழி தகவல் தொடர்பு சாதனங்களில் ஒன்று
    (1) கணினி (2) பத்திரிகை (3) தந்தி
16. சிவனொளிபாதமலை அமையப்பெற்றுள்ள மாகாணம் அல்லாதது
    (1) மத்திய மாகாணம் (2) சப்ரகமுவ மாகாணம் (3) ஊவா மாகாணம்
17. இசுறு முனிய அமைந்துள்ள இடம்
    (1) பொலன்னறுவை (2) தம்புள்ள (3) அநுராதபுரம்
18. அநுராதபுரத்தை ஆண்ட தமிழ் மன்னன்
    (1) எல்லாளன் (2) விஜயன் (3) சங்கிலியன்
19. யோதக் கால்வாயைக் கட்டுவித்த மன்னன்
    (1) பண்டுகாபயன் (2) மகாசேனன் (3) தாதுசேனன்
20. தொடர்பாடலின்போது இரண்டு இடங்களை இணைப்பது எவ்வாறு அழைக்கப்படும்?
    (1) தகவல் (2) தொடர்பு (3) ஊடகம்

(20 x 2 = 40 புள்ளிகள்)

**2. பொருத்தமான சொல்லைத் தெரிந்து இடைவெளி நிரப்புக**

| | | | | |
|---|---|---|---|---|
| நற்பண்புகள் | பௌத்த | மழைவீழ்ச்சி | சிக்கனமாக | சுகாதாரத்துக்கு |

01. உணவுப் பொருட்களை ……………… பயன்படுத்த வேண்டும்.
02. அன்பு, கருணை, இரக்கம் போன்றவை …………………….. ஆகும்.
03. இலங்கைக்கு ……………………… சமயம் மன்னன் தேவநம்பியதீசனின் ஆட்சிக் காலத்தில் கொண்டு வரப்பட்டது.
04. உடனடி உணவுகள் ………………. கேடானவையாகும்.
05. காடுகளை அழிப்பதனால் ……………………….. குறைவடைகின்றது.

(5 x 2 = 10 புள்ளிகள்)


**3. சரியாயின் (√) எனவும் பிழையாயின் (x) எனவும் அடையாளமிடுக.**

01. முதிர்ந்த பலா இலை கடும் பச்சை நிறமாகக் காணப்படும். ( )
02. ஆட்பதிவுத் திணைக்களத்தின் மூலம் தேசிய அடையாள அட்டை வழங்கப்படுகின்றது. ( )
03. நாட்டின் சுதேச மரபுரிமைகளைப் பாதுகாப்பது எமது கடமையாகும். ( )
04. தாவர உண்ணிகளால் தாவரங்களின் சமநிலை பேணப்படுகின்றது. ( )
05. மணல் அகழ்வதால் வெள்ளப்பெருக்கு ஏற்படும். ( )
06. பாடசாலை உபகரணங்கள் உடைந்தால் புதியது பெறத் தேவையில்லை. ( )
07. எந்த நிறுவனத்திலும் சேவையை வழங்கும்போது ஒழுங்கு விதிகள் கடைப்பிடிக்கப்படுவதில்லை. ( )
08. தவறான உணவுப் பழக்கவழக்கங்களால் சீரான உடல் வளர்ச்சியைப் பெற முடியாது போகும். ( )
09. மருந்துகளை வைத்தியரின் ஆலோசனைப்படி உட்கொள்ள வேண்டும்.( )
10. வெப்ப சக்தி மூலம் மின்னழுத்தி இயங்குகின்றது. ( )


(10 x 1 = 10 புள்ளிகள்)

**4. கீழ்வரும் குறியீடுகளின் கருத்துக்களை எழுதுக**







......................... ......................... ......................... .........................

5. கீழே தரப்படும் வினாக்களுக்குச் சரியான விடையைச் சுருக்கமாக எழுதுக.

01. மனதை இதப்படுத்தும் செயற்பாடுகள் இரண்டு தருக.

..........................................................................................................

..........................................................................................................

02. மழை பெய்யப் போவதை முன்கூட்டியே அறிவிக்கும் பிராணிகளின் நடத்தைக் கோலங்கள் மூன்றை எழுதுக.

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

03. கீழே தரப்படும் பதார்த்தங்களுடன் தேசிப் புளியைச் சேர்க்கும்போது ஏற்படும் மாற்றத்தை எழுதுக.

பீற்றூட் சாயம் ..............................................................................

நீலக் காக்கணம் பூச்சாயம் ..............................................................

04. குழுவாக வேலை செய்யும்போது எம்மிடையே இருக்க வேண்டிய நற்பண்புகள் மூன்றை எழுதுக.

..............................................................................................

..............................................................................................

..............................................................................................

05. எமது சீருடையில் படிந்துள்ள பின்வரும் கறைகளை அகற்றுவதற்கு நான் பயன்படுத்த வேண்டிய பொருட்கள் எவை என எழுதுக.

தார் கறை ..................................................................................

சேற்று மண் பட்ட கறை ...................................................................

06. பாடசாலைச் சொத்துக்களைப் பேணிப் பாதுகாக்க நாம் மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகள் இரண்டு தருக.

..............................................................................................

..............................................................................................

07. நாம் வீட்டுத் தோட்டம் செய்வதன்மூலம் பெற்றுக்கொள்ளும் அனுகூலங்கள் மூன்று தருக.

..............................................................................................

..............................................................................................

..............................................................................................

08. பாடசாலை மாணவர் ஒருவருக்கான ஒழுக்கக் கோவையில் இடம்பெறும் முக்கிய விடயங்கள் மூன்றை எழுதுக.

..............................................................................................

..............................................................................................

..............................................................................................

09. பின்வரும் அனர்த்தங்களின்போது தனதும் தனது குடும்பத்தின் பாதுகாப்பிற்காகவும் நீர் செய்ய வேண்டிய செயற்பாடுகள் மூன்று தருக.

மின்னல் தாக்கம் ...........................................................................

வெள்ளப்பெருக்கு ...........................................................................

மண் சரிவு ..................................................................................

10. நீர் வாழும் பிரதேசத்திற்கு அண்மையில் அமைந்துள்ள வரலாற்று முக்கியத்துவம் மிக்க இடங்கள் மூன்று தருக.

……………………………………………………………………………………..…

……………………………………………………………………………………..…

……………………………………………………………………………………..…

11. பின்வரும் கழிவுப் பொருட்கள் இட வேண்டிய கழிவுத் தொட்டியின் நிறத்தை எழுதுக.

உணவுக் கழிவு ……………………………………………………………………..…

காகிதக் கழிவு …..…………………………………………………………………..…

பிளாஸ்ரிக் கழிவு …………………………………………………………………..…

12. எமது பிரதேசத்தில் காணக்கூடிய மூலிகைத் தாவரங்கள் மூன்றின் பெயர்களை எழுதுக.

……………………………………………………………………………………..…

……………………………………………………………………………………..…

……………………………………………………………………………………..…

13. கண்ணாடிக் குவளை ஒன்றில் தண்ணீர், மண்ணெண்ணெய், தேங்காயெண்ணெய் மூன்றும் இட்டுக் கலக்கப்பட்டுச் சிறிது நேரத்தின் பின் அவதானித்தபோது தென்பட்ட விதம் படத்தில் காட்டப்பட்டுள்ளது. இதன்படி ஆங்கில எழுத்துக்கள் குறிக்கும் பொருட்கள் எவை?

A ……………………………………………………………………………………..…

B ……………………………………………………………………………………..…

C ……………………………………………………………………………………..…

14. எமது நாட்டின் சுதந்திரத்திற்காகப் பாடுபட்ட சுதந்திரப் போராட்ட வீரர்கள் மூவரின் பெயரை எழுதுக.

……………………………………………………………………………………..…

……………………………………………………………………………………..…

……………………………………………………………………………………..…

15. சேனைப் பயிர்ச்செய்கையில் பயிரிடப்படும் பயிர் வகைகள் மூன்றை எழுதுக.

……………………………………………………………………………………..…

……………………………………………………………………………………..…

……………………………………………………………………………………..…

(15 x 2 = 30 புள்ளிகள்)